1995 ஏப்ரல் 10]

294—

நம்பியூர் பெண்கள் உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்

35904*—திரு. வி.கே. சின்னசாமி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், பவானிசாகர் தொகுதி, நம்பியூர் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசுக்குக் கோரிக்கை ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. வி.கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தல்லவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே நம்பியூர் என்ற பகுதி—மலையபாளையம், சாவக்கட்டுபாளையம், செம்மம்பாளையம், கூடக்கரை, கடத்தூர், குருமந்தூர் போன்ற எல்லா பகுதிகளிலேயும் உயர்நிலைப் பள்ளி இருந்தாலும்—இந்த நம்பியூரிலே தான் மகளிருக்கு என்று ஒரு உயர்நிலைப் பள்ளி தனியாக இருக்கிறது. சுமார் 5 ஏக்கர் நிலம் அதற்கு இருக்கிறது. ஆயிரக்கணக்கான பெண் குழந்தைகள் அங்கே படித்து வருகிறார்கள். நான் மேலே குறிப்பிட்ட எல்லா ஊர்களிலும் இருக்கிற அத்துணை பெண் குழந்தைகளும் இங்கே வந்துதான் மேல் நிலைப் பள்ளிக் கல்வியை படித்தாக வேண்டும். ஆகவே மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், பெண்களுடைய முன்னேற்றத்திற்கு பயன்படுகிற அளவில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிற இந்த நன்னாளில், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், இந்த வருடமே அந்த பெண்கள் உயர்நிலைப் பள்ளியை - நம்பியூரிலே - மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு மறு பரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன். அத்தோடு அந்தப் பள்ளியின் சார்பாக 1 லட்சம் ரூபாயும் அரசுக்கு

கொடுத்திருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்து, அதை இந்த ஆண்டே செய்ய முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல ஆயிரக்கணக்கான பெண்கள் அந்தப் பள்ளியிலே பயிலவில்லை. 556 பெண்கள் மட்டும்தான் பயிலுகிறார்கள். அந்தப் பள்ளியிலேயிருந்து 2 கிலோ மீட்டர் தூரத்திலே, அரசு மேல்நிலைப் பள்ளி இயங்கி வருகிறது. பத்தாம் வகுப்பிலே பயிலுகிறவர்கள் எண்ணிக்கையைப் பொறுத்தும், அரசு நிதி நிலையைப் பொறுத்தும் முன்னுரிமை அடிப்படையிலேயும்தான் பள்ளிகள் மேம்படுத்தப்படுகின்றன. 2 கிலோ மீட்டர் தூரத்தில் அரசு மேல்நிலைப் பள்ளி இருக்கும்போது உயர்நிலைக் குழு அதைப் பரிந்துரை செய்யுமா என்பதையும் அப்படிப் பரிந்துரை செய்தால் அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி.கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த 2 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிற பள்ளி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி. அதிலே இட வசதியும் குறைவு. 2½ ஏக்கர் நிலம் மட்டுமே அந்தப் பள்ளிக்கு இருக்கிறது. மேலும் கட்டிட வசதியைக் கூட விரிவுபடுத்த முடியாத ஒரு சூழ்நிலை அங்கே இருக்கிறது. ஆகவேதான் இந்தப் பகுதி மக்கள் எல்லாம் இந்தப் பள்ளியை உயர்த்தித் தரவேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அது மட்டும் அல்லாமல் நமது மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், மறைந்த இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அமெரிக்காவிலே உயிருக்கு போராடிய நேரத்திலே, இந்த நம்பியூர் பகுதியிலே என்னை அறிமுகப்படுத்தி வாக்கு கேட்கின்ற நேரத்திலே, இந்த நம்பியூர் பகுதி மக்களை நம்பலாமா என்று கேட்டார்கள். அப்போதே அந்தக் கூட்டத்திலிருந்தவர்கள் எல்லாம் 'அம்மா, தாயே, நீங்கள் எங்களை நம்பலாம், நாங்கள் உங்களுக்குத்தான் வாக்களிப்போம்' என்ற உறுதியையும் தந்தார்கள். அன்று முதல் இன்று வரை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்குத்தான் நம்பிக்கையோடு வாக்களித்து வருகிறார்கள். ஆகவே அந்தப் பகுதி மக்கள் சார்பாக, அந்தப்பகுதியிலே இருக்கிற பெண் குழந்தைகள் சார்பாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு இந்த கோரிக்கையை எடுத்து வைத்து நம்பியூர் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை இந்த ஆண்டே அரசு

1995 ஏப்ரல் 10]

பெண்கள் மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தித் தருமாறு பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவு செய்து அதை நிறைவேற்றித் தருவார்களா என்பதையும் மீண்டும் மறுபரிசீலனை செய்வார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கான கருத்துரு இதுவரையில் பெறப்படவில்லை. அதை அனுப்புவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்பாடு செய்தால், உயர்நிலைக் குழு அதை பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *295*, திரு சிங்கை கோவிந்தராசு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

295—

ஒண்டிப்புதூரில் உயர்நிலைப்பள்ளிக்கு ஆய்வுக் கூடம் கட்டுதல்

38598*—திரு. **சிங்கை கோவிந்தராசு:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிங்காநல்லூர் தொகுதி, ஒண்டிப்புதூர் அரசு ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு அறிவியல் ஆய்வுக் கூடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நல்ல நிதிநிலை அறிக்கையை தந்து, ஏழைகளின் இல்லத்திலும் உள்ளத்திலும் மகிழ்ச்சியை பொங்கவிட்டிருக்கக்கூடிய நமது தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் எல்லாத் துறைகளிலேயும் முன்னேற்றம் அடையும் வகையில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிற இந்த நேரத்தில், ஏழை எளிய மக்களுக்காக கல்வித் துறைக்கு